## முன்னெச்சரிக்கை அறிவிப்புக் குழு (Early Warning Committee)

**கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை: டாக்டர். வி.ஜெயசந்திர பானுரெட்டி, இ.ஆ.ப.,**

ந.க.22387/2020/பே.மே. நாள்:12.09.2020

பொருள்: பேரிடர் மேலாண்மை - வடகிழக்குப் பருவ மழை 2020 - கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழையின் பொருட்டு வருவாய் கோட்ட அளவில் முன்னெச்சரிக்கை அறிவிப்புக் குழு நியமனம் செய்து ஆணையிடுதல்.

பார்வை: முதன்மை செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வடகிழக்கு பருவமழை-2020 முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான சுற்றறிக்கை Rc.No. N.C.I (4)/1875/2020, நாள்: 26.08.2020.

- - - - - - - - -

**ஆணை:**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வடகிழக்குப் பருவ மழை காலத்தில் பெரு மழை வெள்ளம் ஏற்படும் சூழ்நிலைகளில் சேதங்களை தவிர்க்கும் நோக்கத்தில் பொது மக்களுக்கு உரிய முன்னெச்சரிக்கை அறிவிப்புகளை தெரிவிக்கும் வகையில் கீழ்காணும் அலுவலர்கள் கொண்ட முன்னெச்சரிக்கை அறிவிப்புக் (Early Warning Committee) குழு நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

1. வருவாய் கோட்ட அலுவலர், கிருஷ்ணகிரி / ஒசூர். (குழு தலைவர்)
2. அனைத்து காவல் துணை கண்காணிப்பாளர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம்.
3. அனதைத்து வருவாய் வட்டாட்சியர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம்.
4. அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம்.
5. நகராட்சி ஆணையாளர், கிருஷ்ணகிரி / ஒசூர்.
6. அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம்.
7. அனைத்து உள்வட்ட வருவாய் ஆய்வாளர்கள், கிருஷ்ணகிரி.
8. அனைத்து கிராம நிர்வாக அலுவலர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம்.
9. அனைத்து ஊராட்சி செயலர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம்.
10. செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.

1. வருவாய் கோட்ட அளவில் வருவாய் கோட்ட அலுவலர் கோட்ட பேரிடர் மேலாண்மை அலுவலராகவும், முன்னெச்சரிக்கை அறிவிப்புக் குழுவின் தலைவராகவும் செயல்படவேண்டும். தமது கோட்டத்திற்குட்பட்ட வட்டார அளவிலான மண்டல குழுக்களின் பல்துறை அலுவலர்களையும் ஒருங்கிணைத்து பேரிடர் மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ளவேண்டும்.

2. மேற்கண்ட குழு உறுப்பினர்கள் பேரிடர் காலங்களில் தங்களது வரம்பிற்குட்பட்ட பகுதிகள் / கிராமங்களில் நிகழும் இயல்புக்கு மாறான நிகழ்வுகள் குறித்து குழுவின் தலைவருக்கு உடனடியாக தகவல் தெரிவித்து, பொதுமக்களுக்கு எளிதாக சென்று சேரும் வகையில் முழுமையான மற்றும் உண்மையான தகவல்களை தெரிவித்து முன்னெச்சரிக்கை செய்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.

3. தேவையில்லாத வதந்திகள் மூலம் பொதுமக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தாமலும், வதந்திகள் ஏற்படுவதை தடுத்து, முன்னெச்சரிக்கை செய்தல் வேண்டும்.

4. முடிவுகளை மேற்கொள்வதிலும், தகவல்களைப் பரிமாறிக் கொள்வதிலும் ஒளிவு மறைவற்றத் தன்மையைக் கடைபிடித்தல் வேண்டும்.

5. நிகழ்வுகள் குறித்து உண்மையான, தெளிவான அறிக்கையை உடனுக்குடன் குழுவின் தலைவருக்கு தெரிவிக்க வேண்டும்.

6. முக்கியமான நிகழ்வுகள், அசாதாரண சூழ்நிலைகள் எவையேனும் இருப்பின் உடனடியாக கோட்ட பேரிடர் மேலாண்மை அலுவலர் மூலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கவனத்திற்க்கு கொண்டு செல்ல வேண்டும்.

/ உண்மை நகல் /

(ஒம்/-) வி.ஜெயசந்திர பானுரெட்டி,
மாவட்ட ஆட்சியர்,
கிருஷ்ணகிரி.

14/9/2020

மாவட்ட ஆட்சியருக்காக
கிருஷ்ணகிரி

பெறுதல்

14-9-2020

சம்மந்தப்பட்ட அலுவலர்கள். (மின்னஞ்சல் வாயிலாக)
(அலுவலகத் தலைவர்கள் தங்களின் சார்நிலை அலுவலர்கள் / பணியாளர்களுக்கு உத்தரவு நகலை சார்வு செய்யவேண்டும்)

நகல் : காவல் கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி.

நகல் : திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி.

நகல்: உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), கிருஷ்ணகிரி.

நகல் : மாவட்ட ஆட்சியரின் நேர்முக எழுத்தர் மேஜைக்கு,

நகல் : மாவட்ட வருவாய் அலுவலரின் நேர்முக எழுத்தர் மேஜைக்கு.

நகல் : முதன்மை செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-600 005 - தகவலுக்காக அனுப்பப்படுகிறது.